

யாழ்ப்பாணம், மண்டைதீவைப் பிறப்பிடமாகவும்,
இல:58, திருவையாறு, கிளிநொச்சியை வாழ்விடமாகவும் கொண்ட
உயர்சைவ வேளாண் குடிதனில் பிறந்த

அமரத்

உயர்திரு



# சோமசுந்தரம் சரவணபவன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவு

## " சிலாசாசனம்"

09.06.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



யாழ்ப்பாணம், மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, திருவையாற்றை வதிவிடமாகவும் கொண்ட சைவ வேளாண் குலதிலகர்

சோமசுந்தரம் – யோகம்மா

அவர்களின்

சிரேஷ்டபுதல்வன்

# அமரர் சோமசுந்தரம் சரவணபவன்

அவர்களின்

இறைபதம் எய்தியமை குறித்த

"நினைவு சிலாசாசனம்"

# 09.06.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இனிய தெய்வத்திற்கு
# விழிநீர் சமர்ப்பணம்

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"
என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய
வாழ்வாங்கு வாழ்ந்து அன்பைச்
சொரிந்து, அறிவை ஊட்டி,
பண்பை வளர்த்து அன்புத் தெய்வமாக
மனங்களில் என்றும் குடி கொண்டிருக்கும்
எங்களின் குடும்பத்தலைவனின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்தித்து இந் நினைவுச்
சிலாசாசனத்தை அவரின் பாதக்
கமலங்களில் சமர்ப்பணம் செய்து
வணங்குகின்றோம்.*


*குடும்பத்தினர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"



தோற்றம்
16
01
1936

மறைவு
10
05
2022

அமரர்
உயர்திரு
# சோமசுந்தரம் சரவணபவன்


திதி வெண்பா

ஆண்டு சுபகிருது ஆனதொரு சித்திரையில்
பூண்டு வரும் பூர்வபக்க தசமியிலே – நீண்ட புகழ்
மெய்மைத் திருவாளர் சோமசுந்தரம் சரவணபவன்
தெய்வத் திருப்பாதம் சார்ந்த திதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மனைவி அமரர் யோகாம்பிகை



மகள் அமரர் தேவமாலினி (எழில்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்ச புராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்

### திருப்பிரமபுரம்

*பண் : நட்டபாடை* *திருமுறை :1*

*திருச்சிற்றம்பலம்*

*தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்*
*காடுடைய சுடலைப் பொடிபூசியென்னுள்ளங்கவர் கள்வன்*
*ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த அருள்செய்த*
*பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.* 01

*முற்றலாமையிள நாகமோ டேனம் முளைக்கொம்பவை பூண்டு*
*வற்றலோடு கலனாப் பலிந்தேர்ந்தென துள்ளங்கவர் கள்வன்*
*கற்றல் கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால் தொழுதேத்தப்*
*பெற்ற ஊர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.* 02

*நீர்பரந்தநிமிர் புன்சடை மேலோர் நிலாவெண்மதி சூடி*
*ஏர்பரந்த இனவெள்ளை சோரஎன் உள்ளங் கவர்கள்வன்*
*ஊர்பரந்த உலகின் முதலாகிய வோரூரிது வென்னப்*
*பேர்பரந்த பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.* 03

*விண்மகிழ்ந்தமதில் எய்தது மன்றி விளங்குதலை ஓட்டில்*
*உண்மகிழ்ந்தபலி தேரிய வந்தென துள்ளம் கவர்கள்வன்*
*மண்மகிழ்ந்த அர வம்மலர்க் கொன்றை மலிந்த வரைமார்பில்*
*பெண்மகிழ்ந் பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.* 04

*ஒருமை பெண்மையுடை யன்சடையன் விடையூரும் இவனென்ன*
*அருமையாகவுரை செய்ய அமரந்தென துள்ளம் கவர்கள்வன்*
*கருமை பெற்ற கடல் கொள்ளமிதந்தோர் கால மிதுவென்னப்*
*பெருமை பெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.* 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைகலந்த ஒலி பாடலோடாடல ராகி மழுவேந்தி
இறைகலந்த இன வெள்வளை சோர என்னுள்ளம் கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில் நீடுயர் சோலைக் கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 06

சடைமுயங்கு புனலன் அனலன்எரி வீசிச் சதிர்வெய்த
உடைமுயங்கும் அரவோடுழி தந்தென்னுள்ளங் கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர் கானல் அம் பொன்னஞ் சிறையன்னம்
பெடைமுயங்குபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 07

வியரிலங்குவரை யுந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயரிலங்கையரை யன்வலி செற்றுஎன துள்ளம் கவர்கள்வன்
துயரிலங்கும் உல கிற்பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுர மேவிய பெம்மா னிவன்னறே. 08

தானுதல் செய்திறை காணிய மாலொடு தண்டா மரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர் தானென துள்ளங் கவர்கள்வன்
வானுதல் செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 09

புத்தரோடு பொறியில் சமணும் புறங்கூற நெறிநில்லா
ஒத்த சொல்ல உல கம்பலிதேர்ந்தெனது உள்ளங் கவர்கள்வன்
மத்தயானை மறுகவ்வுரி போர்த்தோர் மாய மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே. 10

அருநெறிய மறை வல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறியபிர மாபுர மேவிய பெம்மா னிவனதன்னை
ஒருநெறியமனம் வைத்துணர் ஞானசம் பந்தன் உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய் தான் அரும்பி, விதிர்விதிர்த்து, உன் விரை ஆர் கழற்கு, என்
கை தான் தலை வைத்து, கண்ணீர் ததும்பி, வெதும்பி, உள்ளம்
பொய் தான் தவிர்ந்து, உன்னை, போற்றி, சய, சய, போற்றி!" என்னும்
கை தான் நெகிழவிடேன் உடையாய்! என்னைக் கண்டுகொள்ளே.
1

கொள்ளேன் புரந்தரன், மால், அயன் வாழ்வு குடி கெடினும்,
நள்ளேன் நினது அடியாரொடு அல்லால் நரகம் புகினும்,
எள்ளேன் திரு அருளாலே இருக்கப் பெறின் இறைவா!
உள்ளேன் பிற தெய்வம், உன்னை அல்லாது எங்கள் உத்தமனே!
2

உத்தமன், அத்தன், உடையான், அடியே நினைந்து உருகி,
மத்த மனத்தொடு, மால் இவன்" என்ன, மன நினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட, ஊர் ஊர் திரிந்து, எவரும்
தம் தம் மனத்தன பேச, எஞ்ஞான்று கொல் சாவதுவே?
3

சாவ, முன் நாள், தக்கன் வேள்வித் தகர் தின்று, நஞ்சம் அஞ்சி,
ஆவ! எந்தாய்!" என்று, அவிதா இடும் நம்மவர் அவரே,
மூவர் என்றே எம்பிரானொடும் எண்ணி, விண் ஆண்டு, மண்மேல்
தேவர் என்றே இறுமாந்து, என்ன பாவம் திரிதவரே!
4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவமே புரிந்திலன் தண் மலர் இட்டு, முட்டாது இறைஞ்சேன்
அவமே பிறந்த அரு வினையேன், உனக்கு அன்பர் உள் ஆம்
சிவமே பெறும் திரு எய்திற்றிலேன் நின் திருவடிக்கு ஆம்
பவமே அருளு கண்டாய் அடியேற்கு எம் பரம்பரனே!

5

பரந்து பல் ஆய் மலர் இட்டு, முட்டாது, அடியே இறைஞ்சி,
இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்" என்னும், அன்பர் உள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே! நின் தன் வார் கழற்கு அன்பு, எனக்கும்

6



# திருவிசைப்பா

## திருமாளிகைத் தேவர் அருளியவை

பண்:பஞ்சமம் திருமுறை: 9

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே உணர்வுசூழ் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை தொண்டனேன் விளம்புமா விளம்பே.

தனதனநல் தோழா சங்கரா சூலபாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே கண்கள் மூன்றுடையதோர் கரும்பை
அனகனே குமர விநாயக சனக அம்பலத் தமரர் சேகரனே
நுனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத் தொண்டனேன் விளம்புமா விளம்பே.

காமனைக் காலன் தக்கன் மிககெச்சன்படக்கடைக் கணித்தவன் அல்லாப
பேய்மனம் பிறிந்த தவப்பெருந்தொண்டர் தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநல் தில்லை வட்டங்கொண் டாண்டசெல்வச் சிற்றம்பலக் கூத்ததா
பூமல ரடிக்கீழ் புராண பூதங்கள் பொறுப்பரென் புன்சொலின் பொருளே.

திருநீறு டாஉருத் தீண்டேன் என்னும் திருநீறு மெய்திரு முண்டத்திட்டுப்
பெருநீல கண்டன் திறங்கொண்டிவன் பிதற்றிப் பெருந்தெருவே திரியும்
வருநீ ரருவி மகேந்தி ரப்பொன் மலையின் மலைமகளுக் கருளும்
குருநீ யென்னுங் குணக்குன்றே யென்னும் குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

எச்சனைத் தலையைக் கொண்டு செண்டாடித் திட்டம் ஏறி
அச்சங்கொண் டமரர் ஓட நின்ற அம்பலவற் கல்லாக்
கச்சரைக் கல்வாப் பொல்லாக் கயவரைப் பகநூல் கற்கும்
பிச்சைக் காணா கண்வாய்பேசாதப் பேய்க ளோடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

## சேந்தனார் அருளிச் செய்தது

பண் : பஞ்சமம் திருமுறை : 9

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள் வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல் லாம் விளங்க
அன்ன நடைமட வாள் உமை கோன் அடி யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி யீசற்காட் செய்மின் குழாம்புகுந்து
தண்டங் கடந்த பொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

நிட்டையிலா வுடனீத் தென்னை யாண்ட நிகரில்லா வண்ணங்களும்
சிட்டன்சிவனடியாரைச் சீராட்டும் திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த் திக்கென் அகம் நெகவூறும் அமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைத் தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

புரந்தரன் மாலயன் பூசலிட்டு ஓலமிட்டு இன்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்ப என்னுயி ராண்ட கோவினுக்கு என்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவிக்க வந்தயன் இந்திரன் செங்கண்மால் எங்கும் திசைதிசையன்
கூவிக் கவர்ந்து நெருங்கும் குழாம்கு ழாமாய் நின்று கூத்தாடும்
ஆவிக் கமுதை என்னார்வத்தன் அத்திணை அப்பனை ஒப்பாரார்
பாலிக்கும் பாவகத் தப்புறத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

சேலும் கயலும் திளைக்கும் கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பி லங்கும் என்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனு மறியா நெறிதந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலமேயிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

### அருணகிரிநாதரால் பாடப்பெற்றவை

கைத்தல நிறைகனி அப்பமொடவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியிலுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழடைவனைமுற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாய்
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க ! மலிவளஞ் சுரக்க! மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்கள் ளோங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக! உலகமெல்லாம்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# சோமசுந்தரம்
# சரவணபவன்

*அவர்களின்*

## தாயகம்

அருணவம் சூழ் அலைகடல் நடுவே
திருவுருப் பெற்று திகழ்ந்து விளங்கும்
தில்லையில் வரமும் தென்சாம்பல் கண்ணகியும்
எல்லையில் பிள்ளையும் எழில் முத்துமாரியும்
கண்டு புளியடி - நின்று நடம்புரி
பண்டைக் கோவில் வீரபத்திரனாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமதிலமர்ந்து அடியவர்க்கருளும்
முகப்பு வயல் சூழ் கந்தன் கோவில்
கருவறையருகில் திருவுருப் பெற்று
பெரு நடம்புரியும் நடராசமூர்த்தி
அருவமுமாகி உருவமுமாகி
திரு வெண்காடு சித்தி விநாயகன்
அற்புத எழில்நிறை ஐயன் கோவில்
பொற்புறு மணிக்கோபுர அழகும்
வைகறைப் போதில் விடிவதைக் கொடுக்கும்
ஐயன் கோவில் நாதவெள்ள ஓங்கார ஓசை
தேன்படு கலையும் தென்னை மரங்களும்
கான்படு மரங்களும் கனிதரு மா வாழையும்
மண்ணைக் கிளறின் பொன்னாய்க் குவியும்
வண்ணப் புகையிலை மிளகாய் மேடைகள்
கன்னிப் பெண்ணின் பின்னலசைவது போல்
செந்நெல் கதிர்கள் பொன்மணியசையும்.
கயல் விளையாடி அயலெலாம் துள்ளும்
வயல்கள் நிறைவுடன் தோட்டப்புலங்களும்
பண்டைத் தமிழர் பண்புடன் வாழ்ந்த
மண்டைதீவு எனும் மாண்புறு தாயே !!!

## அமரத்துவம் குறித்த மரபு

தொல் பெரும் வேளாண் மரபுவழி வந்த
சோமசுந்தரம் அவர் துணைவியாம் யோகம்மா
இல்லற வாழ்வில் இனிதே மலர்ந்த
பிள்ளைச் செல்வங்களான
சரவணபவனுடன் தம்பி சுந்தரம் பிள்ளையும்
அக்கா யோகாம்பிகையுடன், தங்கை கமலாம்பிகையுடன்,
பார்வதிப்பிள்ளையும் வந்துதித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா, தம்பி, தங்கைமாருடன்,
இங்கிதமாய் வாழ்ந்த
வாலிபப் பருவம் தன்னில்
பார்ப்போர் கவரும்
சரவணன் எனும் சற்குணக்காளையை
வாழ்ந்த ஊரவரே
வரன் கேட்டு வந்தார்கள்.

விஸ்வலிங்கம் அன்னம்மா தம்பதிகளின்
எண்மக்களின் நடுவே
வந்துதித்த வண்ணமயில்
தங்கப்பதுமையாய் தரணி போற்றும்
உத்தமியாள் யோகாம்பிகையை
எண் திசை வாழ்வோர்.
வாழ்த்தி நிற்க
அந்தணரின் மந்திர ஒலியுடன்
மங்கள வாத்தியம் முழங்கிட
தங்க நாண் பூட்டி
தன் வாழ்வின் துணையவளாய்
ஏற்றுக் கொண்டார்.

தம்பதிகள் வாழ்வு வளங்களுடன்
இனிதே இனித்து நிற்க
பிள்ளைச் செல்வமது எட்டச் சென்றிடவே
கலங்கிய தம்பதியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தன் அருளை வேண்டி
நல்லூரான் வாசலிலே
கந்தசஷ்டி கவசம் பாடி
பக்தியுடன் அனுஷ்டித்தே
கடுந்தவம் புரிந்தனர்.

கந்தன் கருணையால்
மோகனபவன் எனும்
மக்கள் பணியே தன் பணி என்றே
மகத்தான பணியாற்றும் பணிப்பாளரையும்
இராஜபவன் எனும்
பார்போற்றும் பண்பாளனையும்
விஜிதா என்ற நல் ஆசானையும்
கடைக்குட்டி மகளாய் தேவமாலினியை
நாட்டுக்குகந்த வேங்கையவளாய்
இனிதே பெற்றே இல்லற வாழ்வில்
இதமாக வாழ்ந்திட்டார்.

போரின் கொடுமையது
கோரத் தாண்டவம் ஆடிடவே
சொந்த ஊரை விட்டு
திருநெல்வேலியில் குடியமர்ந்தார்.
சொந்த ஊரைவிட்டு வந்தாலும்
தன் பிள்ளைக் கல்விச் செல்வமதை
கருத்துடன் கவனித்தே
கல்வி புகட்டி வரும் நாளில்
கண்ணுற்ற காலனவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்ணூற்று நான்கில்
அவர் துணையைப் பறித்திட்டார்.
பத்தினியாளைப் பறிகொடுத்த
சரவணபவனார் பதறிப்போனாலும்
சிதறிப் போகாமல்
தன் பிள்ளைக் குஞ்சுகளை
அரவணைத்தே வளர்த்திட்டார்.

நித்தம் யுத்தம் தொடர்ந்திடவே
எட்டப் போனால் நல்லதென்று
கிளிநொச்சி மண்ணுக்கே புலம்பெயர்ந்து
நாகபடுவானில் குடியமர்ந்து
விவசாயத்துடன் வியாபாரமும் புரிந்தே
பிள்ளைகளை வளர்த்து வரும் நாளில்
மண்ணின் விடிவிற்காய் வித்தாகிய
சின்னமகள் மாலினியின்
துயரச் செய்தியைக் கேட்டே
கலங்கிய சரவணபவனார்
எதையும் தாங்கும் இதயத்தவராய்
இதையும் ஏற்றுக் கொண்டார்.
பிள்ளைகளின் விருப்பமதை
தன் எண்ணமதாய்க் கொண்டு
திருமணங்கள் செய்து வைத்தே
தேடி வந்த மருமக்களை பெயர் சொல்லி அழையாது
முறையோடு அழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிள்ளைகள் போல பார்த்திடுவார்.

பிள்ளைகளின் இல்லற வாழ்வை
பார்த்து மகிழ்ந்திட்டார்
மகளுடன் வாழ்ந்து வந்தாலும்
லீவு நாளை எதிர்பார்த்தே இருந்து
மகன்மார் வீடு சென்று வந்திடுவார்
தமிழ் நிலவன், தரணிகன், திகழினியன்,
பவஜிதன் என்றே பேரன்களையும்
மதுரிகா, பவனுஜா, அபினயா, சுரபிகா
என்றே பேர்த்திகளையும்
பெற்றே பேரின்பத்துடன் வாழ்ந்திட்டார்.

விடுமுறை நாட்களிலும்,
பிறந்த நாள் நாட்களிலும்
குடும்பங்கள் ஒன்று சேரும் நாளில்
பேரன், பேர்த்திகளின் நடுவே தானிருந்தே
கூடிக் குலாவி மகிழ்ந்திடுவார்.
வித்தகர்களாய் எம் பிள்ளைகளை
வளர்த்தே பிஞ்சுமனங்களில்
தங்கத் தாத்தாவாக நீர் மலிந்ததுடன்

உற்றவர் அயலவர்களுடன்
இனிதே உறவாடி மகிழ்ந்திட்டார்
பொல்லுப்பிடித்து நடந்தாலும்
சொந்தங்கள் தேடிச் சென்றிடுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தங்கள் வாழும் இடங்களில்
அயலவர் நட்பையும் பேணிடுவார்

சீரும் சிறப்பும் செல்வமும் பெற்று
ஊரும், உறவும் சுற்றமும் மகிழ
பேரும் சிறக்க பெருமையாய் வாழ்ந்து
பிள்ளைகள், மருமக்கள் கலங்கிட
பேரப்பிள்ளைகள் ஏங்கிட
யாருக்கும் சொல்லாமல்
தானும் வருந்தாமல்

சுபகிருது வருசம் சித்திரை
இருபத்தேழு தன்னில்
சிலலோக வாழ்வொன்றை
செப்பனிட்டுக் கொண்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன்மாரின் மனதிலிருந்து சில வரிகள்......

தீரா நோயென்று படுத்ததில்லை
உற்ற குறை பகர்ந்ததில்லை
உள்ளம் நோகப் பேசியதில்லை
செல்லமாக எமை வளர்த்து

உங்கள் நாமம் சேர்ந்ததே
எம் நாமம் வைத்து
எமை அழைக்கும் போதெல்லாம்
உங்களை நினைக்க வைத்து

எமை விட்டு நீண்டதூரம்
சென்றுவிட்டீர்– உம்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகன்மார்
ச. மோகனபவன்
ச. இராஜபவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அருமை அப்பாவே...!

என்னைப் பெற்ற தெய்வமே!!
எங்கு நீங்கள் சென்றீர்களோ?
எண்ணிரண்டு வயதினிலே
என் அம்மா சென்றிடவே
எங்களுடன் நீங்கள் இருந்தே
எமை வளர்த்து வந்தீர்களே!

என் தங்கை நாட்டிற்காக
தன் உயிரைக் கொடுத்திட்ட போதிலும்
அவ் இழப்பை நீங்கள் தாங்கி எமை
அரவணைத்தே வந்தீர்களே!

அம்மம்மா இல்லை என்ற குறை தெரியாது
என் அருமைச் செல்வங்களை நீங்கள்
வளர்த்து ஆளாக்கி என் கடைக்குட்டியையும்
பள்ளிக்கு அனுப்பிய பின்னரே
நீங்கள் எமக்குச் சொல்லாது
மீளப் பள்ளி கொள்வது
என்னால் தாங்க முடியவில்லையப்பா.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா, தாத்தா என்று உங்களை
சுற்றிச் சுற்றி வந்தவர்கள் இன்று
தமக்குள்ளே அழுதழுது தவிக்கிறார்களப்பா!

வாழ்க்கையின் நியதி என்ற போதும்
உங்களது இழப்பை எங்களால்
தாங்க முடியவில்லையப்பா!

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் உங்கள் மகள் விஜிதா

மகள்
விஜிதா

அப்பா இல்லாத
வாழ்க்கையை
வாழ்ந்து பார்க்கும்
போதுதான் தெரியும்
"அப்பா என்பது"
வார்த்தை அல்ல
வாழ்க்கையின்
பாடம் என்று.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்களின் மனங்களில் இருந்து சில வரிகள்.....!!

மாமா இல்லையப்பா – நீங்கள்
எமக்கு அப்பா தான்
எம் பெயர் சொல்லி எமை அழைக்காமல்
மருமகன், மருமகள் என்றே
எமை அழைத்துப் பேசிடுவீர்
வாழ எமக்கு வழி பல சொல்லிடுவீர்

எம் குடும்ப விவகாரத்தில்
குறுக்கிட்டுக் குழப்பவில்லை
நடக்க முடியாவிட்டாலும்
நல்ல நாட்களில் வீடு வர மறந்ததில்லை.

சித்திரைப் பௌர்ணமிக்கு எம் வீடுகள்
வந்து சென்ற போது
நாங்கள் நினைக்கவில்லை நீங்கள்
இனி வரமாட்டீர்கள் என்று

சுமக்க முடியாமல் சுமக்கின்றோம்
உங்கள் இழப்பை
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருமகன் – விக்னேஸ்வரன்

மருமகள்மார் – சுபா, செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் மனதில் பதிந்த அப்பப்பா (தாத்தா) ...

முல்லைப் பூ விரிந்ததுபோலச் சிரிப்புடன்
கல கலவெனப் பேசிடும் எங்கள் தாத்தாவே!!
பொல்லு ஊன்றி நடந்தாலும்
மிடுக்குடன் வீடு வரும் நாளை
எப்படி எங்கள் சின்ன மனங்கள் மறந்திடும்??

வேலையின்றி இருந்தாலும்
கையில் கள்ளப்பண்டமது
கொண்டு வந்திடுவீர்
நாம் சுவைப்பதற்கு

எம் மனங்களில் மறவாத
உம்முகத்தை நினைத்து
இறைவனை வேண்டுகின்றோம்.
எம் தாத்தா ஆத்மா சாந்திக்காக!!

பேரன் – பவஜிதன்
பேர்த்திமார் – மதுரிகா
– பவனுஜா
– அபினயா
– சுரபிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் மனதில் நிறைந்த அம்மப்பா (தாத்தா) ...

அம்மப்பாவாக நீங்கள் இருந்தாலும்
அம்மம்மாவாக இருந்து எமை வளர்த்து விட்டீர்.
மறக்க முடியுமா உங்கள் பிரிவை
மறுக்கின்றது எம் மனம் உம் இழப்பை.

உழைத்துக் களைத்து
ஓய்வெடுக்க வேண்டிய உம் வயதில்
விழித்திருந்தே சோறு ஊட்டி
உறங்கத் தாலாட்டி எமை வளர்த்து
தம்பியும் பள்ளி செல்ல அனுப்பி
விடைபெற்று விட்டீர்கள் எங்கள் தாத்தா

எப்படி மறப்போம் உம் நினைவை
வாழும் காலமெல்லாம் உமை நினைத்தே
வாழ்ந்திடுவோம் தாத்தா

உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பேரன்மார் – தமிழ்நிலவன்
– தரணிகன்
– திகழினியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள தாத்தாவே....!!

அன்றொரு நாள் எம்முடன் அறிமுகமாகி
அனைவருக்கும் அளவில்லா
அன்பும் ஆதரவும் கொடுத்தீர்களே!
அன்பான உங்கள் பேச்சும்
அதற்கேற்ற புன்னகையும்
இன்று இங்கு இல்லையே தாத்தா
அறிவான உங்கள் பேச்சும்
ஆதரவளிக்கும் உங்கள் குணமும்
அத்தனையும் தொலைத்துவிட்டோம் இன்று நாங்கள்
காலையில் உங்கள் கனிவான பேச்சும்
மாலையில் காணும் உங்கள் மலர்ந்த முகமும்
மறைந்து போய் விட்டதே தாத்தா
மறக்க முடியவில்லை உங்கள் நினைவுகளை
எல்லோர் வீட்டு நிகழ்விலும்
உங்கள் வருகை என்றென்றும் இருக்க
இன்று நாம் தேடுகின்றோம்
எங்கேயும் இல்லை நீங்கள்
இறைவனிடம் சென்றீர்களோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவில் உங்கள் நினைவுகளுடன்
அயலவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தனது பேரப்பிள்ளைகளுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் உயர்ந்த உத்தமன்

சிவபூமி எனத் திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட இலங்கைத்தீவின் தலை முடிமகுடமென மிளிரும் யாழ்ப்பாணத்தின் தென்திசையில் அமைந்துள்ள சப்த தீவுகளில் ஏர்வளமும், கடல் வளமும், கலைகளும், கல்வியும் தழைத்து ஓங்குகின்ற தலைத்தீவாகவும், முதல் தீவாகவும் விளங்கும் மண்டைதீவின் சிறுப்புலம் முருகன் ஆலயத்தின் சூழலில் ஐந்தாம் வட்டாரத்தில் புகழ் பூத்த உயர் சைவ வேளாண் பெருங்குடியில் தோன்றிய சோமசுந்தரம் யோகம்மா தம்பதியினருக்கு வந்துதித்த தலைமகன் சரவணபவன் ஆவார். அவருக்கு இரு சகோதரிகளும், ஒரு தம்பியும் கூடப்பிறந்த உடன் பிறப்புக்களாவார்கள். அன்னார் இல 08, திருவையாறு, கிளிநொச்சியில் உள்ள நிரந்தர வதிவிடத்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னாரது திடீர் மறைவு உறவுகளை, அன்புள்ளவர்களை எல்லாம் மாறாத சோகத்தில் ஆழ்த்திவிட்டது. வாழ்வில் இறப்பு என்பது முடிந்த முடிவு " எனினும் இதன் வேதனை அவரைச் சார்ந்தோருக்கு தண்டனையாகின்றது. அன்னார் வந்தோரை இன்முகத்துடனும், பெருவிருப்புடனும் வரவேற்கும் நற்பண்புகளை உடையவர். பழகுவதற்கு இனியவர், எளிமையானவர், எளிதிலே கோபம் கொள்ளாதவர், ஆழமான அறிவாளர், எந்த வேலையையும் நேர்மையாகவும், முழு முயற்சியுடனும் செயற்படுத்தும் ஆற்றல் உடையவர். உள்ளத்தால் உயர்ந்த உத்தமன். இவர் கல்வி கற்கும் பருவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றார். கமத்தொழிலில் மிகுந்த ஈடுபாடு உடைய தந்தையாரின் வழிகாட்டலில் இவர் இளம் வயதிலிருந்தே கமத்தொழிலை நல்ல விருப்புடன் ஈடுபட்டு வெற்றி கண்டவர். இதனால் இவர் உதவி வழங்கிய உறவினர்களால் நற்பெயரும் பெற்றார்.

இவரை நான் 06.04.2022 ஆம் திகதி நடைபெற்ற பூப்புனித நீராட்டு விழா நிகழ்வுக்கு அன்னார் இயலாத நிலையிலும் வந்ததால் சந்திக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அவர் இருந்த நிலைப்பாடு பற்றி மனம் திறந்து கதைத்தார். அவரும் தன் நிலைபற்றி ஓர் அளவு மனம் விட்டுக் கதைத்தார். அன்னார். இயலாத நிலையிலும் அவ்விடம் வந்ததிலிருந்து அவரின் நற்பண்புகள் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

அன்னார் அவ்வூரில் திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் சூழலில் ஆறாம் வட்டாரத்தில் உறவு முறைப்படி உரித்தான விசுவலிங்கம் அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், மற்றும் ஏழு உடன்பிறந்த சகோதரர்களின் ஏக சகோதரியுமாகிய யோகாம்பிகையை கரம் பற்றினார். இருவரினதும் நல்லறத்தில் நாலுபேர் வந்து உதயமாகினர். அவர்கள் இடம் பெயரும் வரை இந்த வீட்டிலேயே வாழ்ந்தார்கள். அன்னார் எங்களுக்கு உறவு முறைப்படி மைத்துனர். அவரின் துணைவியார் எங்களுக்கு உடன்பிறவாச் சகோதரி ஆவார். எனது தந்தையாரே இவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தை முன்நின்று நடத்தியவருமாவார்.

1991 இல் நிகழ்ந்த தீவக இடம்பெயர்வு காரணமாக சிறிது காலம் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இருக்க வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்பட்டது. இங்குதான் அழகும் அரும்குணமும் கொண்ட பிரியமான துணைவியார் இறைபதம் அடைந்தார். அன்னாரும் பிள்ளைகளும் தாயின் பாசப்பிணைப்பிலிருந்து விலகிச் செல்ல இயலாது தவித்தனர். இந்தத் துயரத்தின் வேதனையுடன் நாட்டின் நிலைமை காரணமாக
கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடம் பெயரவேண்டிய நிலை ஏற்பட்டது.

தந்தையும் தாயும் பிள்ளைகளின் கல்விக்குத் தகுந்த கல்வியறிவூட்டத் தவறவில்லை. தந்தையும், பிள்ளைகளும் இடம் பெயர்ந்து சென்றதால் தொடர்ந்தும் கிளிநொச்சியிலேயே வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. அன்னாரது அருமைப்பிள்ளைகள் மூவரும் உயர்கல்வி கற்று அவர்களுக்கு திருமணம் செய்து மூன்று ஆசை மருமக்களையும், அவர்களுக்கு ஊடாக பேரப்பிள்கைளயும் பெற்று பெரும் பேறு பெற்றவர். அவர்கள் எல்லோரும் அன்னாரின் பெயர் போற்றும்படி
வாழ்வது கண்ட மன நிறைவோடு இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் அவர் எல்லோரது உள்ளங்களிலும் நிலைத்து நிற்பார் என்பதில் ஐயமில்லை. இருப்பினும் இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள் சுற்றத்தார் அனைவருக்கும் ஆறுதலைக் கூறிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதுடன் அன்னாரது ஆத்மா பேரானந்தப்பேறு எய்த எல்லாம் வல்ல திருவெண்காடு சித்திவிநாயகரின் திருவடிகளில் சிவகதி அடைய அவன்தாள் பணிந்து பிரார்த்திப்போமாக!

**ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!**

சி.ஆ. ஏகானந்தசிவம்
ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர்
340, கோயில் வீதி, நல்லூர்



**விரல் பிடித்த நொடிகள்**
**நெஞ்சில் அழியா**
**சின்னம் ஆகும்...**
**தந்தை என்ற**
**சொல் ஒன்று போதுமே...**
**எண்ணங்கள் வண்ணமாகும்..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையொட்டி வாழ்ந்த தன்னடக்க மனிதன்

காலத்ததால் அழியாத வாழ்வை வாழும் காலத்தில் நிறுவிய பெருமகனார் சோம சுந்தரம் சரவணபவன் அவர்கள். ஆயிரம் பிறை கண்ட பெரியவராக வாழ்ந்து நிறைவு பெற்றவர். உழைப்பின் மீது அதிக நம்பிக்கை கொண்ட இவர் மாட்டு வண்டிலுடன் கரியாலை நாகபடுவான் வந்து பயிர் செய்து மண்டைத்தீவுக்கு செல்வம் கொண்டு சென்று வாழ்ந்தவர். இடப் பெயர்வின் காரணமாக மண்டைத்தீவில் வாழ முடியாத சூழல் ஏற்பட்டபோது வன்னியை வாழ்விடமாக்கி தன்குடும்பத்தோடு குடியேறி வாழ தொடங்கினார். நல்ல பிள்ளைகளை உருவாக்கும் நல்ல தந்தையாக அவர் சாதனை நிலைநாட்டினார். திட்டமிடல் அதிகாரி, ஆசிரியை, அலுவலக பணியாளர் என தன் மூன்று பிள்ளைகளையும் அரச சேவையார்களாக்கியதுடன் காலத்தின் தேவையறிந்து தனது கடைசி மகள் தேவமாலினியை நாட்டுக்காக ஈய்ந்து மண்பற்றாளரானார். வாழும் காலத்தில் குடும்பத் தலைவன் ஒருவனின் பணியை தன் துணையாளின் இழப்பிற்கு பின் தாயாகவும், தக்க தந்தையாகவும் செயற்பட்டு தன் குடும்பத்தைக் காத்தார்.

பிள்ளைகளின் வாழ்க்கைத் துணைக்காக ஆசிரியர், அலுவலக பணியாளர்களாக இருந்தவர்களையும் தன் உறவு குலையாத உருத்துடைய குடும்பத்திலும் நல்ல மருமக்களைத் தேர்ந்தெடுத்து 08 பேரப்பிள்ளைகளையும் பெற்று கிளிநொச்சியில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து மகிழ்ந்தார். தன்னடக்கமும் இயற்கையோடு ஒட்டியவாழ்வும் தன் பண்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு தன் மகளுடன் இறுதிக்காலம் வாழ்ந்து இவ்வூரிலுள்ளவர்களின் மதிப்பையும், மரியாதையும் பெற்றிருந்தார். ஒருவரின் மரணம் அவரது வாழ்க்கைக்கால மதிப்பீட்டை தரும் என்ற வகையில் அவரது சாதனைகளை அவருக்காக ஒன்று கூடிய இறுதி அஞ்சலியின் போது எமை கண்டு கொண்டோம். நல்வாழ்க்கை வாழ்ந்து, வாழ்வோருக்கும் வழியாட்டிய சரவணபவன் ஐயாவின் வாழ்வு எமக்கு வழித்தடமாகட்டும்.

அ. கேதீஸ்வரன்
பிரதி திட்டமிடல் பணிப்பாளர்
மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

---

தேடல் உள்ளவரை
வாழ்க்கைக்கு
அர்த்தம் இருக்கும்
என்று சொல்வாயே
அப்பா அர்த்தமற்ற
வாழ்வினை அர்த்தம்
உள்ளதாக மாற்ற
நானும் தேடுகிறேன்.
ஆனால் நீ மட்டும்
கிடைக்கவில்லையே
அப்பா...!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்



தொல்லையிரும் பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க !
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவிவா ருண்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க !
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விழங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம ளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல

சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவமென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற்குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொழியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் செல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்து
உண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்

காப்பு
நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா
அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி
(நூல் நிலைமண்டில ஆசிரியப்பா)

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக



சுவாமி மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெறறென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர் ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென


பழமுதிர்ச்சோலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகநக நகநக நகநக நகென
டகுடகு டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றெலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர் வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க


திருத்தணி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடியட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்ஷதரும்


பழனி

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நாகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தாளெனைக் கண்டாற்கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கண்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டியுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணல்ஏரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்


திருச்செந்தூர்

எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடனிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
காத்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்



திருப்பரங்குன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னநாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்


நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நாவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாயக் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில்நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவ ஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

முற்றிற்று
திருச்சிற்றம்பலம்


செல்வச் சந்நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்பு



### ***விநாயகர் துதி***

*முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு*
*என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்*
*சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்*
*எக்குற்றமும் வாராமற்கா.*

வேண்டுதற் கூறு
காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிஷாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதில் மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சார்ந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்திலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிங்கப்பாட்டு

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மலபாஷித ஸோபித லிங்கம்
ஜன்மய துக்க விநாயக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

தே – முனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணாகர லிங்கம்
ராவணதர்ப்ப விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி – விபர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுரவந்தித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

கனகமஸா மணி பூஷத – லிங்கம்
பணிபதி – வேஷ்டித – ஸோபித லிங்கம்
தக்ஷ ஸுயக்ஞ – விநாஸன
லிங்கம் தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜஹார ஸுஸோபித லிங்கம்
ஸஞ்சிதபாப விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையார் பக்தி பிரவேச லிங்கம்
தினகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஸ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாஸிவ லிங்கம்

ஸ்ரீ லிங்காஷ்டகம் ஸம்பூர்ணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 16 | | 10 |
| - |  | - |
| 01 | | 05 |
| - | | - |
| 1936 | | ௨0௨௨ |

மண்டைதீவு 06ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,
வில்சன் வீதி, திருவையாறை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் சோமசுந்தரம் சரவணபவன்

### கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் பிரசுரித்தவர்கள்

01. கிளி / முல்லை மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசப் பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

02. சுகாதார அமைச்சு, வடக்கு மாகாணம்- செயலாளரும், உத்தியோகத்தர்களும்.

03. பணியாளர் நலன்புரிச் சங்கம் – மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் ஜெயந்திநகர், கிளிநொச்சி.

04. நண்பர்கள்

05. கிளிநொச்சி மாவட்ட அரசசாரதிகள் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. ஜெயக்குமார் கிருபா குடும்பத்தினர்
(நாகதம்பிரான் பல்பொருள் வாணிபம்) ஜெயந்திநகர்.

07. அரசாங்க அதிபர் மற்றும் ஊழியர் நலன்புரிச்சங்கம்
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

08. திட்டமிடல் பணிப்பாளரும், உத்தியோகத்தர்களும்
மாவட்டச்செயலகம், கிளிநொச்சி.

09. சிவகுரு யசோதன் (சிவகுரு காட்வெயார் உரிமையாளர்)

10. ஆசிரியர் கழகம்- திருவையாறு மகா வித்தியாலயம்

11. பணிப்பாளர்கள், பணியாளர்கள், இல்லக்குழந்தைகள்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம் - ஜெயந்திநகர், கிளிநொச்சி.

12. பணிப்பாளர்கள், பணியாளர்கள் கரைச்சி தெற்கு பலநோக்கு
கூட்டுறவு சங்கம் (வ.து) கிளிநொச்சி.

13. பல்கலைக்கழக நண்பர்கள் (93/94 கல்வியாண்டு)

அன்புகாட்டு ஆனால் அடிமையாகிவிடாதே
இரக்கங்காட்டு ஆனால் ஏமாந்து விடாதே
பணிவாயிரு ஆனால் கோழையாயிராதே
கண்டிப்பாயிரு ஆனால் கோபப்படாதே
சிக்கனமாயிரு ஆனால் கஞ்சப்படாதே
வீரனாய் இரு ஆனால் போக்கிரியாயிராதே
சுறுசுறுப்பாயிரு ஆனால் பதற்றப்படாதே
தர்மம் செய் ஆனால் ஆண்டியாகிவிடாதே
பொருளைத்தேடு ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்பு ஆனால் கடவுளையும்
உன்னைப் பெற்ற தாயையும் மறந்துவிடாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைக்கு சில..!

அடிக்கடி தவறு செய்கிறவன் அப்பாவி. ஒரு தவறை திரும்ப திரும்பச் செய்கிறவன் மூடன். ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை. தன்னையறியாமல் தவறு செய்து தன்னையறிந்து திருத்திக்கொள்கிறவனே மனிதன்.

காலை நேரம் எப்படி தோன்றுகிறதோ மாலை நேரமும் அப்படியே தோன்றுகிறது. விடியும் பொழுதிற்கும் முடியும் பொழுதிற்கும் தோற்றத்தில் வேறுபாடில்லை. இன்ப துன்பங்களையும் அப்படியே நினைத்து விடு. எந்தக் கட்டத்திலும் நீ அழ வேண்டிய அவசியமிருக்காது.

### பெருந்தவறுகள்

உழைக்காமல் ஈட்டிய செல்வம்
மனச்சாட்சி இல்லாத இன்பம்
பண்பு இல்லாத அறிவு
நல்லொழுக்கம் இல்லாத வணிகம்
தியாகம் இல்லாத வணக்கம்

-மகாத்மாகாந்தி -

**மனிதன் முயற்சியால் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்துபார். ஒவ்வொரு தடவையும் உனக்கு தோன்றுவது கடவுள் இருக்கிறார் என்பதே.!**

**பணமும் பதவியும் மோசமானவை என்று ஞானிகள் சொல்கிறார்கள்? அவை வரக்கூடாதவனுக்கு வருவதால், கிடைக்கக்கூடாதவனுக்கு கிடைப்பதால்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகிய

## அமரர் சோமசுந்தரம் சரவணபவன்

10.05.2022

**அவர்கள்** சிவபதம் அடைந்த செய்தி கேட்டு நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையில் நேரில் வந்து எமது துயரில் கலந்து கொண்டு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் செலுத்தியோருக்கும், மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகளை வெளியிட்டோருக்கும், இறுதிக் கிரியைகளை ஆற்றிய சிவாச்சாரியப் பெருந்தகைகளுக்கும், இறுதி இரங்கல் உரையாற்றியவர்களுக்கும், மற்றும் அந்தியேட்டி வைபவத்திலும், எமது வீட்டில் நடைபெற்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் இந் நூலை குறித்த காலப்பபுதிக்குள் அழகுற அச்சிட்டுத் தந்த கிளிநொச்சி, வேழன் பதிப்பகத்தினருக்கும், தேவையறிந்து உதவிய நல் உள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவளி தோன்றல்

சோமசுந்தரம் + யோகம்மா

- யோகாம்பிகை
- சரவணபவன்
- கமலாம்பிகை
  பார்வதிப்பிள்ளை
- சுந்தரம்பிள்ளை

விசுவலிங்கம் + அன்னம்மா

- நடனசுந்தரம்
- கனகசுந்தரம்
  பாலசுந்தரம் ( யோகலிங்கம்)
- யோகாம்பிகை
  சோமசுந்தரம்
  பஞ்சலிங்கம்
  இராசலிங்கம் (பெரியதம்பி)
  அமிர்தலிங்கம் (சின்னத்தம்பி)

(சரவணபவன் — யோகாம்பிகை)

மோகனபவன் + சுபாஷினி

- மதுரிகா (எழில்)
- பவஜிதன்

இராஜபவன் + செல்வறஞ்சினி

- பவனுஜா
- அபினயா
- சுரபிகா

விஜிதா + விக்னேஸ்வரன்

- தமிழ்நிலவன்
- தரணிகன்
- திகழினியன்

❖ தேனமாலினி (எழில்)

❖ அமரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அனுபவம் என்பதே அறிவு

பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப்பார் என இறைவன் பணித்தான்
அன்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பு என்பது யாதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்

ஒவ்வொன்றையும் மனிதன் அனுபவித்தே தான்
உணரவேண்டுமா? அனுபவித்தே தான் அறிவது
வாழ்வெனில் ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்று அருகில் வந்து
அனுபவம் என்பதே நான் தான் என்றார்.

-கவிஞர் கண்ணதாசன்-

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி 021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org